# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No. 118/2022**

**PW4**

| | | |
|---|---|---|
| Name | : | அரவிந்த் |
| Father's/Husband's Name | : | குமார் |
| Village | : | புதுப்பாளையம் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.08.2025.
Accused A1,2, 4 - 7 present.

**முதல் விசாரணை**

நான் வீரானந்தல் கிராமத்தில் வசித்து பிளம்பர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். புதுப்பாளையம் செல்லும்போது பார்த்துள்ளேன். இறந்து போன வெங்கடேசனை எனக்கு தெரியும். 3 வருடத்திற்கு முன்பு நாச்சிப்பட்டு கிராமத்தில் நடந்த பாட்டுக்கச்சேரி கேட்டுவிட்டு நான் வீட்டுக்கு சென்றேன். நான் வீட்டிற்கு வந்த பிறகு கொலை நடந்துவிட்டது என்று ஊரில்பேசிக்கொண்டார்கள். நான் நேரடியாக எதுவும் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2021 ஆம் தேதி இரவு 9.30 மணியளவில் இறந்துபோன வெங்கடேசன் என்பவருடன் தர்மா உட்கார்ந்து கொண்டு அவருக்கு பின்னால் நாங்கள் மற்றுமொரு இருசக்கர வாகனத்தில் நானும் , மணி, ஸ்ரீராம் ஆகிய மூவரும் உட்கார்ந்து கொண்டுஇருந்தோம் .என் பாளையத்தில் இருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது, புதுப்பாளையம் மெயின் ரோடு TNCC குடோன் அருகே கல்லாற்று ஓடை தரைப்பாளத்திடம் நாங்கள் வந்துகொண்டிருந்தபோது அங்கு வழியில் TN25BM4194 என்ற Bolero pickup van நின்று கொண்டிருந்ததாகவும் ,

அதற்கு பக்கத்தில் மதி , சுரேஷ் நின்று கொண்டிருந்ததாகவும் , அதற்கு பக்கத்தில் இருசக்கரவாகத்தில் அங்கு வந்த வினோத் , ஏழுமலை ஆகீயோர் எங்களை மறித்து நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த வசந்தும் , வல்லரசும் எங்களை சுற்றி வளைத்தவுடன் நாங்கள் அனைவரும் தப்பி ஓடி , செடியில் மறைந்திருந்து பார்த்தபோது எனக்கு பின்னால் வந்த வெங்கடேசன் கால் தடுமாறி கீழே விழுந்தவுடன் எதிரிகள் மதி , வினோத், சுரேஷ் வீச்சறுவாளை கொண்டு வெங்கடேசனை பார்த்து ஆபாசமாக பேசி மதி என்பவர் அன்னிக்கு என் கையை வெட்டுன அதனால எனக்கு கை இல்லை உன்னை இன்னைக்கு வெட்டி சாய்த்தால்தான் என் ஆத்திரம் அடங்கும் என சொல்லிக்கொண்டு முன்பக்க தலை , வலது பக்க கழுத்து , வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த வசந்த் அறிவாளால் வலது தோள்பட்டை , இடது தோள்பட்டை , இடது முழங்கை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , சுரேஷ் வீச்சறுவாளால் வெங்கடேசனின் இடது கால் , வலது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த ஏழுமலை , வினோத், வல்லரசு வெங்கடேசனை விட்டுவிடாமல் வழிமறித்தும், இருந்தபோது அதை நான் நேரில் பார்த்துவெங்கடேசனின் தந்தை முருகன் என்பவருக்கு தகவல் சொன்னேன் என்றும் , உடனே அங்கு வந்த வெங்கடேசனின் தந்தை முருகன் , வெங்கடேசன் மனைவி ரத்னா ஆகியோர்கள் வெட்டுகாயத்துடன் இருந்த வெங்கடேசனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவனைக்கு கொண்டு சேர்த்ததாகவும் , அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாகவும் மருத்துவர் கூறினார் என்றும் , இது சம்மந்தமாக வெங்கடேசனின் தந்தை முருகன் புதுப்பாளையம் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும் , அதன்பேரில் வழக்கு பதிவு செய்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் , போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.